## பகுதி – III

1. **“தெண்ணீர் கயத்துச் சிறுமீன் சினையினும் நுண்ணியதேயாயினும்”**
அ) தெண்ணீர் என்பதன் பொருள் யாது?
ஆ)கயம் என்பதன் பொருள் என்ன?

2. **“மாக மடங்கலும் மால் விடையும் பொன் நாகமும், நாகமும் நாண நடந்தார்”**
அ) இங்கு நடந்து சென்றவர் யார்?
ஆ)இங்கு மாகமடங்கல், மால்விடை எனக் கூறப்படுபவை எவை?

3. **“பிரசண்ட மாருதத்திற்குப் பிறகு..... அந்த சபையில் நிலவியது”**
அ) பிரசண்டமாருதம் என்பதன் பொருள் என்ன?
ஆ)பிறகு என்ற சொல்லினால் ஆசிரியர் கூறும் விடயம் யாது?

4. **“புலன்களோடு கரணமும் ஆவியும் போந்து நின்ற விருப்புடன்”**
அ) புலன்கள் எனக்குறிப்பிடப்படுபவை எவை?
ஆ)கரணம் என்பது எவற்றைக் குறிக்கின்றது?

5. ‘‘**அடி குடத்தடையு மாடும்போதே இரையும்**’’

அ). இப்பாடலில் கையளாப்பட்டுள்ள அணியாது?
ஆ). பிண்ணாக்கு என்பதன் இரு பொருள்களையும் தருக?

6. **இக்கதையில் வரும் புகழ்பெற்ற புலவர் ஒருவரையும் புகழ்பெற்ற இலக்கியம் ஒன்றையும் தருக?**

7. **எனக்கு ஒன்டும் தெரியாது, நான் என்டை டைரக்டரியில் தேடிக் கொண்டே வந்தேன். இது உங்களுடையதா? இக்கூற்று யாரால் யாருக்கு கூறப்பட்டது?**

8. **“முழங்குதிரைப் புனலருவி கழங்கெழுந் தாடும்”**
(அ) இப்பாடலடியில் இடம்பெற்றுள்ள அணி யாது?
(ஆ) குறிப்பிடப்பட்டுள்ள பாரம்பரிய விளையாட்டு எது?

9. **“போத மூன்று நலஞ்செயு நாடு**
**புவன மூன்று வலஞ்செயு நாடு”**
(அ) இங்கு கூறப்படும் போதம் மூன்றும் எவை?
(ஆ) புவனம் என்று குறிக்கப்படும் மூன்றும் எவை?

10. **“மேழி பெருகவேணும் தம்பிரானே**
**நாடு தழைக்கவேணும் தம்பிரானே”**
(அ) இப்பாடலில் தம்பிரான் எனப்படும் கடவுள் யார்?
(ஆ) மேழி பெருகுதல் என்பதன் கருத்து யாது?

11. **“குன்றனைய திருநெடுந்தோட் குகனென்பா**
**இந்நின்ற குரிசி லென்றான்’’**

அ). இங்கு குரிசில் என்று அடையாளப்படுத்தப்படும் நபர் யார்?
ஆ). இதில் இடம்பெற்றுள்ள அணி யாது?

12. **“மெய்வீரர் பெயர்ந்ததுவு நலமாயிற்**
**றாமன்றே விலங்கற் றிண் டோட்”**

அ). இங்கு ‘மெய்வீரர்’ என்று குறிப்பிடப்படுபவர்கள் யாவர்?
ஆ). மெய் வீரர்கள் எங்கிருந்து எங்கு பெயர்ந்ததாக கூறப்படுகிறது?

**13. “தொழிலாளி ஒருவன் குடித்துவிட்டு ஆடும்போது அவரை அடையாளப்படுத்தும் கிராமியப் பாடலின் இசை.’’**

அ). மேற்குறித்த சம்பவம் காணப்படுகின்ற திரைப்படம் யாது?
ஆ). ‘எது நல்ல சினிமா’ என்ற கட்டுரையில் இத் திரைப்படம் எடுத்துக்காட்டப்பட்டமைக்கான காரணம் யாது?

**14. கடுமையார் கானகத்துக் கருணையார்**
**கலியேகக் கழற்கான் மாய’’**

அ). இங்கு ‘ஆர்கலி’ என்பதன் பொருள் யாது?
ஆ). இங்கு திருமால் எவ்வாறு அடையாளப்படுத்தப்படுகிறார்?

**15. “காட்சிப் படிமங்கள் மூலம் சொல்லக்கூடிய ஒன்றை வார்த்தை மூலம் கூற முயன்றால் அங்கே சினிமா சீரழிகிறது.”**

அ). மேற் கூறிய கூற்றை கூறியவர் யார்?
ஆ). இக் காட்சிப் படிமங்களை சிறப்பாக கையாண்ட இயக்குனராக குறிப்பிடப்படுபவர் யார்?

**16. “ஒருமைச் செயல் ஆற்றும் பேதை எழுமையும் தான்புக்கு அழுந்தும் அளறு”**

அ). இங்கு அளறு என்பதன் பொருள் யாது?

ஆ). இக்குறட்பாவின் பொருளை எழுதுக.

**17. “மையல் ஒருவன் களித்தற்றாத் பேதைதன் கையொன்றுடைமை பெறின்”**

அ). பேதை என்பதன் பொருள் யாது?
ஆ). மேற்படி குறட்பாவின் பொருளை எழுதுக.

**18. ‘சிந்தூர திலக நுதல் சிந்துரத்தின்**

**மருப்பு ஒசித்த செங்கண் மாலே’**

அ). இங்கு சிந்தூரம், சிந்துரம் எனும் சொற்களால் குறிப்பிடப்படுபவை யாவை?
ஆ). ‘செங்கண்மாலே’ எனும் சொல்லால் குறிப்பிடப்படுபவர் யார்?

**19. ‘அரவ நெடுங்கடல் ஆடை அவனி எலாம்’**

அ). இங்கு அரவம் என்பதன் பொருள் யாது?
ஆ). பூமி எதனை ஆடையாக அணிந்துள்ளது?

**20. ‘பரிவுடன் மற்று இவை கூறும் பவன குமாரனை மலர்க்கை பணித்து நோக்கி’**

அ). இங்கு ‘பவனகுமாரன்’ என குறிப்பிடப்படுவது யார்?
ஆ). மலர்க்கை பணித்து நோக்கியவன் யார்?

**21. ‘அரவுயர்த்தோனுடன் மறுசூது ஆடிநீர் வென் றவந்நாள் அவன்தான் சொன்ன’**

அ). இங்கு ‘அவன்’ எனச் சுட்டப்படுபவன் யார்?
ஆ). மேற்படி பாத்திரம் இடம்பெறும் இதிகாசம் யாது?

**22. ‘விரிகுழல் பைந்தொடி நாணி வேத்தவையில் முறையிடு நாள் வெகுளேல் என்று’**

அ). விரிகுழல் என்பது என்ன தொகையாக வந்துள்ளது?
ஆ). இங்கு பைந்தொடி எனக் குறிப்பிடப்படுபவர் யார்?

23. **“….இற்றைத்திங்கள் இவ்வெண் நிலவில்**

**வென்று ஏறி முரசின் வேந்தர் எம் குன்றும் கொண்டார்….”**

அ). இங்கு “முரசின் வேந்தர்” என்று குறிப்பிடப்படுவோர் யாவர்?
ஆ). “எம் குன்று’ என்பதில் குறிப்பிடப்படும் குன்று யாது?

24. **“இதோ நாம் விளையாடிய மரப்பாச்சிகள்….”**

அ). இக்கூற்று யாரால் கூறப்பட்டது?
ஆ). “மரப்பாச்சி” என்பது எதனைக் குறிக்கிறது?

25. **“காலப்புனல் கனக்கும்
கண்ணீரையும் சுமந்து…”**

அ). இவ்வரியில் கையாளப்பட்டுள்ள அணியினைக் குறிப்பிட்டு விளக்குக.
ஆ). இவ்வரியில் இழையோடியுள்ள உணர்வு யாது?

26. **“பறம்பு மலை மக்களின் அன்பை என்னடி விட்டுச் செல்வது?**

**குறவர்கள்… கானவர்கள்… எயினர்கள் தந்தையின் பிரிவில் ….”**

அ). இக்கூற்று யாரால், யாருக்குக் கூறப்பட்டது?
ஆ). இங்கு குறிப்பிடப்பட்டுள்ள மலைவாழ் மக்கள் பிரிவினர் யாவர்?

27. **‘சின்னப் பதுமை கொடு சிறார் செய்மணம் போலுமாரே
தெரிவை அவர்க்கு இம்மாற்றம் சீர்க்கிளியே கூறுதியால்’**

அ). பெண் அடிமைத்தனம் இங்கு எவ்வாறு வெளிப்படுத்தப்படுகிறது?
ஆ). பதுமை, தெரிவை என்பவற்றின் கருத்து யாது?

28. **‘அன்ன நடை மைவிழியாள் அம்பொன் மலர்க் கொம்பனையாள்
என் இதயத்தாமரைக்கு ஓர் இலக்குமியாம்…’**

அ). இங்கு இடம்பெற்றுள்ள உவமை அணி ஒன்றைக் குறிப்பிடுக.
ஆ). இங்கு பயிலப்படும் உருவக அணியினைக் குறிப்பிடுக.

29. **‘தந்தை தாயார்இலரேல் தரியாள் என் பாங்கருடன்
வந்தாள் மகிழ்ந்தாள் வதிந்தாள் பைங்கிளியே….’**

அ). காதலின் குணப்பண்பு யாதெனக் குறிப்பிடப்பட்டுள்ளது?
ஆ). ‘பாங்கர்’ என்ற சொல் குறிக்கும் பொருள் யாது?

30. **‘தெய்வம் உணவே மாமரம் புட்பறை
செய்தி யாழினி பகுதியொடு தொகைஇ
அவ்வகை பிறவும் கருவென மொழிவ’**

அ). கருப்பொருள்கள் எனக் குறிக்கப்படுபவை எவை?
ஆ). இச்சூத்திரம் இடம்பெறும் நூல் யாது?

31. **‘யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்’**

அ). என்பதன் மூலம் வெளிப்படும் உயர் பண்பு எது?
ஆ). இங்கு ‘வையகம்’ என்று குறிப்பாக யாரைக் குறிக்கிறது?

32. **‘அமிழ்தம் இவைவதாயினும் இனிதெனத்
தமியர் உண்டலும் இலர்’**

அ). ‘தமியர்’ என்பதன் பொருள் யாது?
ஆ). இந்த அடிகள் உணர்த்தி நிற்கும் உயர் பண்பு யாது?

33. **‘செய்தி யாழின் பகுதியொடு தொகை’**

அ). இவ்வடிகள் தொல்காப்பியத்தில் எவ்வியலில் இடம்பெற்றுள்ளன?
ஆ). மா என்பதன் பொருள் யாது?

34. **‘வெள்ளைநிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ**
**வள்ளலடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ’**

அ). இப்பாடலைப் பாடியவர் யார்?
ஆ). இது எவ்வகை இலக்கியமாகும்?

35. **“சிறுமாவையும் ஊர்ந்து இன்புறாஅர் ஆயினும் கையின் ஈர்ந்து இன்புறூஉம் இளையோர் போல்”**

அ). இவ்வடிகளில் காணப்படும் அணி யாது?
ஆ). இன்புறாஅர், இன்புறூஉம் என்பவற்றில் காணப்படும் அளபெடை யாது?

36. **“இனி நினைந்து இரக்கம் ஆகின்று....”** எனும் பாடலைப் பாடியவர் யார்? இதன் திணை, துறை என்பவற்றைக் குறிப்பிடுக.

37. **“திணிமணற் செய்வுறு பாவைக்குக் கொய்பூத் தைஇ”**

அ). இங்கு குறப்பிடப்படும் விளையாட்டு யாது?
ஆ). இங்கு குறிப்பிடப்படும் பாவை எதனால் ஆக்கப்படுகின்றது?

38. **“உயிருடன் சென்ற ஒரு மகள் தன்னினும்**
**செயிருடன் வந்த இச்சேயிழை தன்னினும்...”**

அ). இக்கூற்று யாரால் யாரிடம் வினவப்பட்டது?
ஆ). இங்கு உயிருடன் சென்ற ஒரு மகள், செயிருடன் வந்த சேயிழை யாவர்?

39. **“அத்திறம் நிற்க”**

அ). இக்கூற்றை உரைத்தவர் யார்?
ஆ). உரைத்தமைக்கான காரணம் யாது?

40. **“ஈமஞ்சேர் மாலை போல இழிந்திடப்பட்ட செயலாகும்”**

அ). இங்கு பயிலப்பட்டுள்ள அணி யாது?
ஆ). ஈமஞ்சேர் மாலை என்பதன் கருத்து யாது?

41. **“கதியிழக்கினும் கட்டுரை இழக்கிலோம் என்றான்”**

அ). இக்கூற்றினை உரைத்தது யார்?
ஆ). கட்டுரை என்பதால் குறிக்கப்படுவது யாது?

42. **“என் வெள்ளைக் கொக்கு தூங்கிக் கொண்டிருந்தது”**

அ). இங்கு வெள்ளைக் கொக்கு என விபரிக்கப்படுபவர் யார்?
ஆ). இக்கூற்றுக்கு சொந்தக்காறர் யார்?

43. **“இஞ்சால வா மகன் மையத்தத் தூக்கப் போறாக”**

அ). இக்கூற்று யாரால் யாருக்கு கூறப்பட்டுள்ளது?
ஆ). “மையத்து” என்பதன் கருத்து யாது?

**44. "இந்த ராஜ்யத்தின் அரசியைப் போல் நானுமொரு இளவரசனானேன்"**

அ). அரசி எனக் குறிப்பிடப்படுபவர் யார்?
ஆ). இளவரசன் என்று குறிப்பிடப்படுபவர் யார்?

**45. "முந்திரிக் கசறு வெள்ளைச் சேர்ட்டில் மறுப் போட்டிருந்தது"**

அ). இதில் கசறு என்பது எதனைக் குறிக்கிறது?
ஆ). இதில் வரும் ஆங்கிலச் சொல் யாது?

**46. "பழுதிலா அவர்க்கோர் கல்லறை இல்லை.."**

அ). இங்கே அவர் எனக் குறிப்பிடப்படுபவர் யார்?
ஆ). இக்கவிதையினை தமிழில் மொழி பெயர்த்தவர்யார்?

**47. "குன்றெனவே நிமிர்ந்தோங்கிக் குதூகலிக்கும் தோள்கள்"**

அ). இங்கு குறிப்பிடப்படுபவன் யார்?
ஆ). இதில் இடம்பெறும் அணியைக் குறிப்பிடுக.

**48. "நிறைமதிதன் துணைவியர்கள் சூழ வரும் கோலம்"**

அ). நிறைமதி, துணைவியர்கள் எனக் குறிப்பிடப்படுவது எவற்றை?
ஆ). இது வெளிப்படுத்தும் கோலம் எந்நேரத்திற்குரியது?

**49. "இடது கையின் பெருவிரலை ஊன்றி வெட்கிச் சிரித்தான் அது ஒரு செத்த சிரிப்பு"**

அ). அவன் வெட்கிச் சிரிப்பதற்கான காரணம் என்ன?
ஆ). இடது கையின் பெருவிரலை ஊன்றி இடுவது எவ்வாறு அழைக்கப்படும்.?

**50. "வந்திருக்கக் கூடாது அவன் இன்று அலுவலுக்கு"**

அ). இவ்வரிகளின் சொந்தக்காரர் யார்?
ஆ). அலுவல் என்றால் என்ன?

**02. பின்வரும் செய்யுட் பகுதிகளை வாசித்து அதன் கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

1) மாத மூன்று மழையுள்ள நாடு
வரு' மூன்று விளைவுள்ள நாடு
வேத மூன்றும் பலாவுள்ள நாடு
விசே' மூன்றுங் குலாவுள்ள நாடு
போத மூன்று நலஞ்செயு நாடு
புவன மூன்று வலஞ்செயு நாடு
நாத மூன்றுரு வானகுற் றால
நாத ராரிய நாடெங்கள் நாடே.

அ) நாதம் மூன்றும் எவை?
ஆ) மூவகை வழிபாடுகளும் யாவை?

**2)** என்றலுமே யடியின்மிசை நெடிதுவீழ்ந்
தழுவானை யிவன்யா ரென்று
கன்றுபிரி காராவின் றுயருடைய
கொடிவினவக் கழற்கான் மைந்த
னின்றுணைவ னிராகவனுக் கிலக்குவற்கு
மிளையவற்கு மெனக்கு மூத்தான்
குன்றனைய திருநெடுந்தோட் குகனென்பா
னிந்நின்ற குரிசி லென்றான்.

அ). இப்பாடலில் குகன் யார் யாருக்கு சகோதரனாக கூறப்படுகின்றான்?
ஆ). "குன்றனைய திருநெடுந்தோள்" என்ற தொடரில் பயின்றுள்ள அணியை விளக்குக.

**3)** புடரெலாம் படைத்தாளைப் பழிவளர் க்குஞ்
செவிலியைத்தன் பாழ்த்த பாவிக்
குடரிலே நெடுங்காலம் கிடந்தேற்கு
முயிர்ப்பாரங் குறைந்து தேய
வுடர் எலாம் முயிரிலா வெனத் தோன்று
முலகத்தே யொருத்தி யன்றே
யிடரிலா முகத்தாளை யறிந்திலையே
லிந்நின்றா ளென்னை யீன்றாள்.

அ). இப்பாடலில் கம்பன் கைகேயியை இழிவாக அறிமுகப்படுத்தும் விதத்தை எடுத்துக்காட்டுக.
ஆ). இப்பாடலில் இராமனைப் பிரிந்து பரதனும் உலக மக்களும் அனுபவிக்கும் துயர் எவ்வாறு கூறப்படுகிறது?

**4)** போர் முடித்தான் அமர் பொருது புலம்புறு சொல்
பாஞ்சாலி பூந்தண் கூந்தல்
கார் முடித்தான் இளையோர் முன் கழறிய
வஞ்சினம் முடித்தான் கடவுள் கங்கை
நீர் முடித்தான் இரவொழித்த நீ அறிய
வசை இன்றி நிலைநின்று ஓங்கும்,
பேர் முடித்தான் இப்படியே யார் முடித்தார்
இவனுடனே பிறப்பதேநான்.

அ). 'கங்கை நீர் முடித்தான்' எனக் குறிப்பிடப்படுபவர் யார்? அவ்வாறு குறிப்பிடப்படுவதற்கான காரணம் யாது?

ஆ). 'இரவொழித்த' எனும் பதத்தால் குறிப்பிடப்படும் செயல் யாது?

**5)** உண்பதுவு முறங்குவது மூர்க்கதைகள் பேசுவதும்
பெண்கடொழி லாமென்றே பேசிடுவ ரொருசாரார்
பெண்களுக்குத் தம்பதியே பெருந்தெய்வ மன்பர் சிலர்
பெண்களுக்கு மடிமைகட்கும் பேதமில்லை யென்பர்சிலர்
பேதைமைகா ணிவர் க்கொள்கைபேர்த்தறிவாய் பசுங்கிளியே.

அ). பெண்களின் தொழிலாக இங்கு கூறப்படுவது எது?
ஆ). அறியாமை உடையோனின் கொள்கைகளாக இங்கு கூறப்படுபவை இரண்டினைத் தருக.

**6)** அன்னநடை மைவிழியா ளம்பொன்மலர்க் கொம்பனையாள்
என்னிதய தாமரைக்கோ ரலக்குமியாம் பொன்னரசி
கன்னன்மொழி கேளாது கஞ்சமுக நோக்காது
மனினிலத்து வாழேன் மடிந்திடுவன் மங்கையர்க்கு
மற்றிப்பழி சேருமென மாழ்குவேன் பைங்கிளியே

அ). இப்பாடலில் பெண்ணின் அழகு எவ்வாறு கூறப்படுகிறது?
ஆ). இப்பாடலில் காணப்படும் உருவக அணியினைக் குறிப்பிடுக.

7) இந்த சினிமா மொழியை, அதன் தன்மையைஇ தனித்துவத்தை உணர்ந்துஇ ஒரு படைப்பாளி அதை அழுத்தமாக கையாழும்போதுஇ அங்கே நல்ல சினிமா பிறக்கிறது.இந்த மொழியிலிருந்து மாறுபட்டு வாய்ப்பேச்சால் கதை சொல்ல முற்பட்டால் அங்கே சினிமா நலிவடைகிறது. பேசும் மொழி போலவே இந்த மொழியின் நயம் அதைப்பயன்படுத்தும் படைப்பாளியின் திறனை கற்பனை வளத்தை பொறுத்தது. சூரியன் உதயமாவதைக் கண்டால் ஒருவன் ‘ஓகோ விடிகிறது’ எனலாம். கவிஞன் அதைக்கண்டாலோ ‘’பொழுது புலர்ந்தது யாம் செய்த தவத்தால் என்கிறான்.

அ). நல்ல சினிமா பிறப்பதற்கும் இ சினிமா நலிவடைவதற்குமான காரணங்களாக கூறப்படுபவை யாவை?
ஆ). “சினிமா மொழியின் நயம் அதைப்பயன்படுத்தும் படைப்பாளியின் திறனை கற்பனை வளத்தை பொறுத்தது. ‘’ இக் கருத்தை உறுதிப்படுத்த ஆசிரியர் கையாண்ட எடுத்துக்காட்டு யாது?

8) சர்வசன வாக்குரிமையைப் பற்றி அந்தக் காலத்திற் பேசுவதுங்கிடையாது. உரிமை உள்ளவர்களும் குறித்த ஓரிடத்துக்குப் போய்த் தமது வாக்கை இன்னாருக்கென்று வழங்குவதும் இல்லை. கல்விமான்கள், பிரபுக்கள் கூட்டங்கூடித் தங்கள் அபிப்பிராயத்தை அரசாங்கத்தார்க்கு தெரிவிப்பது வழக்கம். இந்த இருவரில் தக்கவர் இன்னாரென்று வாதிப்பதற்குத்தான் அந்தப் பாரிய கூட்டம், விசுவநாதம்பிள்ளையின் தலைமையில் நடக்கின்றது. அந்தக்கூட்டத்திற்கு ‘வாதமகாசபை’ என்றும் பெயர் வைத்துக் கொள்ளலாம்.

அ). சர்வசன வாக்குரிமை என்றால் என்ன?
ஆ). வாதமகாசபை என்று எதற்குப் பெயர் வைத்துக் கொண்டார்கள்?

---

***01. 2016***

திருக்குற்றாலக் குறவஞ்சி என்ற பாடப்பகுதியில்
அ). நாட்டு வளம்
ஆ). திரிகூடநாதரின் சிறப்பு
என்பன விபரிக்கப்படுமாற்றினை விளக்குக.

***02. 2020***

குற்றாலக் குறவஞ்சியில்
அ). மலைச்சிறப்பு
ஆ). நாட்டுச் சிறப்பு

***03. 2023***

குற்றாலக் குறவஞ்சியில்
அ). திரிகூட மலையின் உயர்ச்சி
ஆ). அதன் வளம்

***04. 2017***

கிருட்டிணன்தூதுச் சருக்கத்தில்
அ). தருமனுடைய பொறுமையும்
ஆ). வீமனின் ஆவேசமும்
வெளிப்படுமாற்றினை விபரிக்குக.

***05. 2019***

கிருட்டிணன் தூதுச் சருக்கத்தில்
அ). தருமன்
ஆ). வீமன்
ஆகியோர் போர் பற்றிக் கொண்டுள்ள அபிப்பிராயங்களை விளக்குக.

***06. 2021***

கிருட்டிணன் தூதுச் சருக்கத்தில்
அ). சமாதானத்தை வலியுறுத்தி தருமனும்
ஆ). போரை வலியுறுத்தி வீமனும்
முன்வைத்த கருத்துக்கள்

***07. 2023***

கிருட்டிணன் தூதுச் சருக்கத்தில்
அ). குரநாட்டின் வளம்
ஆ). கிருட்டிணனின் பெருமை

***08. (2016) - 15 புள்ளிகளுக்கான வினா***

திருக்குறளிலுள்ள பேதைமை என்ற அதிகாரத்தின் அடிப்படையில்,
அ). பேதைமை என்றால் என்ன?
ஆ). பேதையர் அடையும் துன்பம் என்பவற்றை விளக்குக.

***09. (2018) – 15 புள்ளிகளுக்கான வினா***

பேதைமை என்ற அதிகாரத்தில்,
அ). பேதைமை உடையோரின் செயல்கள்.
ஆ). பேதைமை உடையோரைச் சுட்டப் பயன்படும் அணிகள் என்பவற்றை விளக்குக.

***10. (2020) – 15 புள்ளிகளுக்கான வினா***

பேதைமை என்ற அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.
அ). பேதையர் இயல்பு.
ஆ). பேதையர் அடையும் கேடு.

***11. (2023) – 15 புள்ளிகளுக்கான வினா***

பேதைமை என்ற அதிகாரத்தில்
அ). வள்ளுவர் கூறியுள்ளவற்றை தெளிவுபடுத்துக.
ஆ). அதில் வள்ளுவர் கையாண்ட அணிகளை இனங்கண்டு, அவற்றில் நீர் காணும் நயங்களை விளக்குக.

***12. 2018***

நாவலர் எழுந்தார் என்ற கட்டுரையில்,
அ). நாவலரின் ஆளுமையும் நேர்மையும்
ஆ). பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் சம்பவச் சித்திரிப்புத் திறனும்
புலப்படுமாற்றை விளக்குக.

***13. 2021***

நாவலர் எழுந்தார் என்ற கட்டுரையில்,
அ). வாதமகா சபையினதும், அங்கு இடம்பெற்ற வாதங்களினதும் சிறப்பு
ஆ). கடும் நோய்க்கு மத்தியிலும் நியாயத்தின்பால் நாவலர் காட்டிய சிரத்தை

***14. 2023***

நாவலர் எழுந்தார் என்ற கட்டுரையில்,
அ). வாதமகாசபையின் இயல்புகள்
ஆ). நாவலர் எழுந்தமை

***15. 2016***

இலட்சியமும் சமநோக்கும் என்ற கட்டுரையில்
அ). கண்ணகி.
ஆ). சந்திரமதி
ஆகியோர் தத்தமது இலட்சியங்களை எவ்வாறு பேணி நடந்து கொண்டார்கள் என்பதை விளக்குக.

***16. 2019***

இலக்கியமும் சமநோக்கும் என்ற கட்டுரையில், இலக்கியத்துக்கும் இலட்சியத்துக்குமிடையிலான தொடர்பை வலியுறுத்துவதற்கு ஆசிரியர்.
அ). சிலப்பதிகாரம்
ஆ). மகாபாரதம்
ஆகியவற்றைக் கையாண்ட முறையை விளக்குக.

***17. 2022***

இலக்கியமும் சமநோக்கும் என்ற கட்டுரையில்,
அ). இலக்கியமும் சமநோக்கும் என்பதற்கான விளக்கம்
ஆ). மாணிக்கவாசகர், தருமர், தசரதன் ஆகியோர் தத்தம் இலட்சியத்திற் கொண்ட உறுதிப்பாடு

***18. 2017***

மூத்தம்மா என்ற சிறுகதையில்
அ). கதைக்கள வர்ணணை.
ஆ). மூத்தம்மா என்ற பாத்திரப்படைப்பு
என்பன அமைந்திருக்கும் விதத்தை விளக்குக.

***19. 2019***

மூத்தம்மா என்ற சிறுகதையில்
அ). காசீம்
ஆ). மூத்த வாப்பா
ஆகிய பாத்திரங்கள் படைக்கப்பட்டுள்ளவாற்றை விளக்குக.

***20. 2021***

மூத்தம்மா என்ற சிறுகதையில்
அ). கிராமிய வாழ்வியல்
ஆ). ஆசிரியரின் வருணனைத்திறன்

***21. 2019***

மூத்தம்மா என்ற சிறுகதையில்
அ). மூத்தம்மாவின் ஆளுமைத்திறன்
ஆ). அந்த ஆளுமை காசிமில் செல்வாக்குச் செலுத்திய விதம்

***22. 2018***

"ஆசைக்கிளியே…" என்று தொடங்கும் நாட்டார் பாடலில்.
அ). காதலி பற்றிய வருணனை
ஆ). காதலனின் மன உறுதி
ஆகியன வெளிப்படுமாற்றை விளக்குக.

***23. 2020***

நாட்டார் பாடல்கள் என்ற பகுதியில்.
அ). உழவரது வேண்டுதல்
ஆ). அரிவி வெட்டுதல் பற்றிய சித்திரிப்பு
ஆகியன இடம்பெறுமாற்றை விளக்குக.

***24. 2017***

பங்கப் பழனத்து… என்று தொடங்கும் பாடலில்
அ). நாட்டு வளம் மன்னனின் ஆற்றல் என்பனவும்
ஆ). தலைவன் மீது தலைவி கொண்ட காதலும்
விவரிக்கப்படுமாற்றை எடுத்துக் காட்டுக.

***25. 2021***

அ). ஓர் தட்டிலே… என்று தொடங்கும் பாடலில் சீதக்காதியின் கொடைத்திறம்
ஆ). கழியும் பிழை… எனத்தொடங்கும் பாடலில் காளமேகப் புலவரின் கவிச்செருக்கம்

**26. 2018**

“இனி நினைந்திரக்க மாகின்று…” என்று தொடங்கும் புறநானூற்றுப் பாடலில்,
அ). இளமைக்காலத்து உணர்வுகளும்
ஆ). முதுமைக் காலத்து உணர்வுகளும், சித்தரிக்கப்படுமாற்றினை விபரிக்குக

**27. 2022**

அ). “இனி நினைந்திரக்க மாகின்று…” என்று தொடங்கும் புறநானூற்றுப் பாடலில், முதியவரின் ஏக்கம்

ஆ). தச்சன் செய்த…. எனத்தொடங்கும் குநற்தொகைச் செய்யுளில் காதலியின் பிரிவுத்துயர்

***28. 2017***
தமிழர் பண்பாடு என்ற கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு
அ). தமிழர் பண்பாட்டின் குறிக்கோள்கள் யாவை எனக் குறிப்பிடுக.
ஆ). அவற்றுள் உலக மனப்பான்மை என்ற பண்பாடு பற்றி விவரிக்குக.

***29. 2019***
தமிழ்ப் பண்பாடு என்ற கட்டுரையில்
அ). பக்தி
ஆ). ஒழுக்கம்
என்பன எவ்வாறு விளக்கப்பட்டுள்ளன என்பதை தெளிவு படுத்துக.

***30. 2021***
தமிழ்ப் பண்பாடு என்ற கட்டுரையில்
அ). பண்டைத் தமிழ்ச் சமுதாயத்தில் நிலவிய உலக மனப்பான்மை
ஆ). மக்கள் நலக்கொள்கை

***31. 2022***
தமிழ்ப் பண்பாடு என்ற கட்டுரையில்
அ). பழந்தமிழ்ப்புலவர்கள்
ஆ). பிற்கால அறிஞர்கள்
ஆகியோரிடத்து கண்ணோட்டம் எனும் மனப்பான்மை காணப்பட்டமை